# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/7 - 2020 ජුනි මස 29 වැනි සඳුදා - 2020.06.29

*2182/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (xiv).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*20 (4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்குத் தவறியுள்ளார்கள் எனவும் திருப்திப்படுவதன் மேல், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணைவிதிச் சட்டத்தின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக, மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு கலாநிதி நவரட்னகே சுனில் ஜயந்த நவரட்ன அவர்களை 2020, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

**கலாநிதி பந்துல குணவர்த்தன,**
*உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.*

கொழும்பு,
*2020, யூன் 25.*

*07-389*